பதிவு எண் M. 4729

# தமிழ் ஹரிஜன்

தமிழ்ப்பண்ணை வெளியீடு: ஆசிரியர்கள் பொ. திருகூட சுந்தரம், நாமக்கல் கவிஞர்

மகாத்மா காந்தியடிகளின் வாரப் பத்திரிகை

40 ] சென்னை—ஞாயிறு, ஜனவரி 12, 1947. [ விலை. அணா. 2

## எங்கள் பொங்கல் வாழ்த்து

கடவுள் அருளையும் காந்தியடிகள் ஆசிர்வாதத்தையும் முன்னிட்டு தமிழ் மக்களுக்கு இந்த வருஷம் சுதந்திரப் பொங்கல் வாழ்த்துக் கூறுகின்றோம்.

ஆசிரியர்கள்

## சென்னை அரசாங்கத்தின் துணிக்கொள்கை

சென்னை அரசாங்கத்தின் துணிக்கொள்கையை முக்கியமாக ஆக்ஷேபிப்பவர்கள் அந்த துணி விஷயத்தில் ஏராளமான பணம் போட்டிருக்கும் முதலாளிகளே. இது சாதாரணமாக எதிர்பார்க்கக் கூடியது தான். ஆனால் அவர்கள் கூறும் வாதம்தான் நமக்கு விளங்கவில்லை. அவர்களில் யாரும் கதர் திட்டத்தையோ அதன் அடிப்படைத் தத்துவத்தையோ ஆக்ஷேபிக்கக் காணோம். அதிலிருந்து அவர்களுக்கு அது விஷயமாக தவறு கண்டு பிடிக்க முடியவில்லை என்று தெரிகிறது. கதர் துணியும், மில் துணியும் இரண்டும் ஏக காலத்தில் உற்பத்தி செய்ய வேண்டும் என்று சொன்னால் அதிலும் அவர்களுக்கு, ஆக்ஷேபணை இல்லை.

ஆனால் அது சாத்தியமாகுமா என்பதுதான் கேள்வி. பதில் எளிதாகச் சொல்லி விடலாம். காந்தியடிகள் நூறாயிரம் முறை சொல்லி யிருக்கிறார். கதரும் மில் துணியும் ஒன்றுக் கொன்று முற்றிலும் முரண்பட்டவை. கதர் மில் துணியோடு போட்டி போடவும் முடியாது. அதனுடன் சேர்ந்து வாழவும் முடியாது. இது அனுபவத்தில் தெரிந்த விஷயம். இரண்டும் ஏக காலததில் அபிவிருத்தி அடைய முடியும் என்று சொல்வது பூனையையும் எலியையும் ஒன்றாக வளர்க்கலாம் என்று கூறுவது போன்றதாகும். ஆக்ஷேபணைகளில் பிரதானமானவை மூன்று:—

(1) மாகாணத்தில் துணிப் பஞ்சம் ஏற்பட்டிருக்கும் சமயத்தில் இந்தத் திட்டத்தைக் கொண்டு வந்தது அசந்தர்ப்பமானதாகும்.

(2) இந்தத் திட்டம் மில் துணி வளர்ச்சி முழுவதையும் தடுத்துவிடும்; மற்ற மாகாணங்கள் முன்னேறும். நம்முடைய மாகாணம் பின்னடைந்து விடும்.

(3) மனிதர் ஒவ்வொருவருக்கும் தன் இஷ்டம்போல் உடை உடுத்தவும் தனக்கு இஷ்டமில்லாவிட்டால் வேலை செய்யாதிருக்கவும் சுதந்திர முண்டு. இந்தத் திட்டம் அதைப் பறித்துவிடும்.

இந்த மூன்று ஆக்ஷேபனைகளையும் ஆராய்வோம்:—

(1) துணிப் பஞ்சம் ஏற்பட்டிருப்பதாகக் கூறுகிறார்களே, அது எப்படி உண்டாயிற்று? யுத்தத்தின் காரணமாக அயல்நாட்டிலிருந்து துணி வரவில்லை. அதனால் ஏற்பட்டது.

வெகு சீக்கிரத்தில் அயல்நாடுகள் தங்கள் துணிகளைக் கொண்டு வந்து இங்கே தள்ளிவிடுவார்கள். அவற்றின் விலை நாம் போட்டி போட முடியாத அளவு குறைந்ததாயிருக்கும். இதற்கு இடையில் நம்முடைய மில் முதலாளிகள் தங்கள் மில்களை விஸ்தரிக்கவும் புது மில்களை ஏற்படுத்தி அயல்நாட்டார் அடித்த கொள்ளையை தாங்கள் அடிக்கவும் விரும்புகிறார்கள். இதனால், கிராமவாசிகளுக்கு ஏற்படும் லாபம் என்ன? அயல்நாட்டார் கொள்ளை அடிப்பதற்கும் நம் நாட்டார் கொள்ளையடிப்பதற்கும் வித்தியாஸம் யாது? கதர்த் திட்டம் தடுக்க விரும்புவதெல்லாம் வாயில்லா பிராணிகளாகிய ஏழைகளை அயல்நாட்டாரோ நம் நாட்டாரோ கொள்ளை யடிப்பதைத்தான். அதைத் தடுப்பதற்குக் கதர்த் திட்டத்தைவிட வேறு தகுந்த மார்க்கம் ஏது? அந்நிய நாட்டார் தங்கள் கேவலமான காரியத்தை ஆரம்பிப்பதற்கு இன்னும் கொஞ்ச நாளாகும். அதற்குமுன் நாம் நம்முடைய பொருளாதார நிலைமையை ஒழுங்குபடுத்திக்கொள்ள வேண்டும். அறிவுடனும் முன் யோசனையுடனும் செய்யப்படும் தேச நிர்மாண வேலையினால்தான் அது சாத்தியமாகும். ஒருவர் கொள்ளையடிப்பதைத் தடுத்து மற்றொருவரை கொள்ளையடிக்கச் செய்வதால் நமக்கு எந்த விதமான நன்மையும் உண்டாகாது. நம் நாட்டில் கோடிக்கணக்கான மக்கள் வேலையில்லாமல் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அவர்களை நம்முடைய நாட்டு மக்களின் க்ஷேமத்திற்காகப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும். கைராட்டினமானது சமத்துவ தர்மத்தையும் உழைப்பின் கௌரவத்தையும் ஒருங்கே போதிக்கின்றது. அத்தகைய கைராட்டினத்தைக் கைக்கொண்டால் மட்டுமே நாம் அந்த லக்ஷியத்தைக் கௌரவத்துடனும் சுயமரியாதையுடனும் அடைய முடியும்.

நம்முடைய மாகாணத்தில் துணியே இல்லாதது போல் கூறுகிறார்கள். இப்பொழுதுகூட நம்முடைய மாகாணத்துக்கு வேண்டிய நூலுக்கு அதிகமாகவே நூல் உற்பத்தி நடந்து கொண்டிருக்கிறது. அப்படி இருந்தும்கூட நம்முடைய மாகாணத்திலுள்ள ஐந்து லக்ஷம் கைத்தறிகளும் மாதத்தில் இருபதுநாட்கள் வேலை செய்யாமல் இருக்கின்றன. அதிகமாக மில்களை ஏற்படுத்துவதும் அதிகமாக மில் கதர்களை பெருக்குவதும் நம்முடைய பிரச்சினையைத் தீர்த்து விடுமா? பசியால் வாடும் நெசவாளர்களுக்கு அதிகமான வேலையும் அதன் காரணமாக அதிகமான கூலியும் கிடைக்கும்படி செய்ய வேண்டும். அவர்கள் மில் நூலை எதிர்பார்த்துக்கொண்டு நிற்கும் வரை அது சாத்தியமாகாது. மில்களில் ஏராளமான நூலை உற்பத்தி செய்வது தான் நாட்டில் பலர்க்கு வேலை இல்லாமல் செய்திருக்கிறது. கிராமங்களில் கைராட்டினங்களைப் பெருக்கியே இந்தக் கஷ்டத்தை நிவர்த்தி செய்ய வேண்டும். அதிர்ஷ்டவசமாக இதுவிஷயத்தில் நம்முடைய மாகாணமே; மற்ற மாகாணங்களை விட அதிகமாக முன்னேறி இருக்கிறது. நாம் பெற்றிருக்கும் இந்த அனுபவத்தை வீணாக்கி விடலாகாது.

மற்றொரு சாதகமான விஷயம் யாதெனில் நாம் மேனாட்டு நாகரிகம் என்னும் சேற்றில் முழங்கால் வரைதான் ஆழ்ந்திருக்கிறோம் என்பதாகும். கைராட்டினங்கள் அழிந்து போனாலும் கைத்தறிகள்

இன்னும் அழியாமலே இருந்துகொண்டிருக்கின்றன. நம்முடைய ஜனங்களில் நூற்றுக்குத் தொண்ணூறுபேர் இன்னும் கைத்தறித் துணியையே விரும்பி அணிகிறார்கள். ஆதலால் துணிப் பஞ்சம் இருப்பதாக வைத்துக்கொண்ட போதிலும் கைராட்டின நூல் உற்பத்தியை பெருக்கினால் துணிப் பஞ்சம் இல்லாமல் ஒழிந்து போகும். இந்த சந்தர்ப்பத்தை கைராட்டின நூல் உற்பத்திக்கு உபயோகித்துக் கொள்ளவேண்டும். "அவசிய மேற்பட்டால்தான் புதிய விஷயங்கள் கண்டு பிடிக்கப்படும்" என்னும் ஆங்கிலப் பழமொழியை மறந்துவிடலாகாது :

அஹிம்சையில் நம்பிக்கையுடையவனாகவும் பிறர் மனத்தைப் புண்படுத்த விரும்பாதவனாகவும் இருந்த போதிலும் துணிப் பஞ்சமென்றும் துணி விலை அளவுக்கு மிஞ்சி அதிகரித்து விட்டதென்றும் நம்முடைய முதலாளி நண்பர்கள் முதலையைப் போல் கள்ளக் கண்ணீர் வடிக்கும்பொழுது அவர்களைப் பார்த்து கீழ்கண்டவாறு கேட்க வேண்டுமென்றே தோன்றுகிறது:— "நீங்கள் யுத்தகாலத்தில் கனவில்கூட எண்ண முடியாத அளவு அதிகமான விலைக்கு நூலையும் துணியையும் விற்று உங்கள் பணப்பையை நிரப்பினீர்கள். வருமானவரி மூலம் சர்க்காருக்கு கோடிக் கணக்கான பணத்தைக் கொட்டிக் கொடுத்தீர்கள். இப்பொழுது ஏழைகளுக்காக பரிந்து பேசும் உங்களுடைய அன்பு அப்பொழுது எங்கே போயிருந்தது?"

2. நம்முடைய மாகாணம் மில் தொழில் அபிவிருத்தியில் பின்னடைந்து விடும் என்று சொல்லும் ஆக்ஷேபணையின் தாத்பரியம் விளங்க வில்லை. தேசத்தின் முன்னேற்றத்தை அறியக் கூடிய அளவுகோல் துணிமில்களின் எண்ணிக்கையா? அல்லது, ஏழை மக்களின் நிலைமையா? மில்களை அதிகரிப்பதினாலும் துணியையும் நூலையும் அதிகமாக உற்பத்தி செய்வதாலும் ஏழைகளுடைய வறுமையும் வேலையில்லாக் கஷ்டமும் நீங்கி விடா. எவ்வளவுக் கெவ்வளவு அத்தகைய பொருள்களை அதிகமாக உற்பத்தி செய்கிறோமோ அவ்வளவுக் கவ்வளவு அதிகமாக நாம் அவைகளை விற்பதற்கு வேண்டிய அந்நிய நாடுகளைத் தேடவும் பிடிக்கவும் வேண்டியவ ராவோம். அயல் நாட்டைப் பிடித்தாலும் இதர மாகாணத்தைப் பிடித்தாலும் இந்தச் சண்டை ஓயாமல் நடந்து கொண்டே தான் இருக்கும். அதிகமாக உற்பத்தி செய்து விட்டால் விலையை ஏற்றுவதற்காக உற்பத்தி செய்த பொருள்களை அழித்துவிட வேண்டிய நிலைமை ஏற்படும். காப்பிக் கொட்டை நிறைந்த பெரிய கப்பல்களை இந்த மாதிரி கடலுள் தாழ்த்தி விட்டார்கள். இது நம்முடைய நாகரீகத்திற்கு ஒரு இழுக்காகும். ஆதலால் மில் தொழிலை அபிவிருத்தி செய்ய விரும்பினால் துணித் தொழிலை விட்டு விட்டு மற்ற தொழில்களையே அந்த முறையில் அபிவிருத்தி செய்யலாம்.

3. இஷ்டம்போல் உடுத்தவும் உழைக்கவும் சுதந்திரம் வேண்டு மென்று கூறும் வாதமும் சரியானதன்று. அதைச் சொன்ன உடனேயே அதைத் தவறென்று தள்ளி விடலாம். பிறருடைய க்ஷேமத்தை கவனியாமல் தன்னிஷ்டம் போல் வாழ வேண்டு மென்பதை யாரும் ஒப்புக் கொள்ள மாட்டார்கள். சுதந்திரம் வேண்டியது தான். ஆனால் செய்யும் காரியம் எதுவும் பிறர்க்கோ தேசத்திற்கோ தீங்கு செய்வதாக இருத்தலாகாது. எவ்வளவு தாழ்ந்தவராயினும் அவர்களுடைய நலத்தையும் லக்ஷ்யம் செய்யாத நாகரீகம் நாகரீக மாகமாட்டாது.

ஆகவே சென்னை சர்க்காருடைய கதர்த்திட்டமானது கிராம வாசிகளுடைய நிலைமையை மாற்றி அவர்களையும் மானத்துடனும் மரியாதையுடனும் வாழும்படியாக செய்வதற்காகவே வகுக்கப் பட்டிருக்கிறது என்பது தெளிவாகும். ஆதலால் அந்தத் திட்டத்தால் கிராமவாசிகளுக்கு தீமையுண்டாகு மென்று சொல்லுகிறவர்கள் விஷய மறியாதவர்களாய் இருக்க வேண்டும், அல்லது விஷயம் அறிந்து கொண்டே தங்கள் நலனுக்காக வேண்டு மென்று இப்படி கூறுகிறவர்களாயிருக்க வேண்டும்.

எல். என். கோபாலசாமி

## தீக்ஷை பெறுதல்

ஆங்கில ஆசிரியர் "எர்வென்" என்னும் பெயருடைய நூல் ஒன்று எழுதி யிருக்கிறார். அதில் நோயாளிகள் சிறைச்சாலையிலும் குற்றம் செய்தவர்கள் வைத்தியசாலையிலும் இருப்பதாகச் சொல்லி இருக்கிறார். காந்தியடிகளும் அதே அபிப்பிராயம் உடையவராகக் காணப்படுகிறார். அவரும் நோயை தண்டிக்கத்தக்க ஒரு குற்றமாகவே மதிக்கிறார். தனக்கு வந்தாலும் சரி, பிறருக்கு வந்தாலும் சரி, அவர் ஒருபோதும் மன்னிப்பதில்லை. அவர் ஆகாகான் மாளிகையிலிருந்த பொழுது அவருக்கு மலேரியா கண்டது. அதன்காரணமாக முன்கூட்டியே விடுதலை செய்யப்பட்டார். அப்பொழுது அவர் கூறியதாவது :—

"என்னிடத்திலுள்ள நம்பிக்கை முழுவதையும் நான் இழந்து விட்டேன், நான் கடவுளுடன் ஒன்றியிருக்கவில்லை என்பது விளங்குகிறது. உங்களுக்கு வழி காட்ட நான் தகுதியுடையவன் அல்லன். ஆதலால் நீங்கள் ஒவ்வொருவரும் என்னை விட்டுப் பிரிந்து உங்கள் இஷ்டப்படியே நடந்து கொள்ளுங்கள்,"

இதேமாதிரிதான் காந்தியடிகள் சமீபத்தில் தம்முடைய தோழர்களை வேறு வேறு கிராமத்திலிருந்து வேலை செய்யும்படி பணித்தபொழுதும் கூறினார். அவர் கூறியதாவது :—

"சேனையிலுள்ள போர் வீரன் பாதத்தைப் பாதுகாத்துக்கொள்ளாமல் நோயுண்டாக இடம் கொடுத்தால் உடனே அவனை வீட்டுக்கு அனுப்பி விடுவார்கள். அஹிம்ஸா வீரன் அதைவிட அதிக ஜாக்கிரதையாக நடந்துகொள்ள வேண்டும்."

முன்னொரு சமயம் நான் கிழக்கு வங்காளத்திலும் தெற்கு வங்காளத்திலும் ஒரு மாத காலம் சுற்றி அலைந்திருக்கிறேன். அப்பொழுது "ஜலம்" என்று கூறப்படும் ஒரு அற்புதமான பொருளை சுமார் 700 கோவில்க் குளங்களில் குடித்திருக்கிறேன். எனக்கு எவ்வித நோயும் உண்டாகவில்லை. அதனால் இப்பொழுது நிரம்ப தைரியமா யிருந்தேன். ஆனால் நான் என்னுடைய கிராமத்திற்குச் சென்றதுமே மலேரியா வந்து படுத்துக்கொள்ள வேண்டியதாயிற்று. திரு சாருபாபு, டாக்டர் சுசீலாவை உடனே அனுப்புமாறு காந்தியடிகளுக்குச் சொல்லி அனுப்பினார். மறுநாள் எனக்கு அவரிடமிருந்து ஒரு கடிதம் வந்தது. அதில் அவர் கூறியதாவது :—

"கிராமத்துக்குப் போகிறேன் என்று அவசரப்பட வேண்டாம். கிராமத்துக்குப் போகிறவர்கள் அங்கே வாழவும் இறக்கவும் தயாராகச் செல்ல வேண்டும். நோய் வந்தால் அங்கேயே குணப்படுத்திக்கொள்ள வேண்டும்; அல்லது அங்கேயே சாக வேண்டும். அப்பொழுதுதான் கிராமத்திற்குச் செல்வதற்கு என்பதற்கு அர்த்தம் உண்டு. ஆதலால் அவர்கள் வீட்டு மருந்துகளையும் இயற்கை வைத்தியத்தையும் கொண்டு திருப்தி அடைய வேண்டும். டாக்டர் சுசீலாவுக்கு ஒரு கிராமம் கொடுக்கப் பட்டிருக்கிறது. அதைத்தான் அவர் கவனிக்க வேண்டும். தற்போது அவர் நமக்குப் பணி செய்ய முடியாது. கிராமத்து ஜனங்களுக்குமட்டும் பணி செய்ய வேண்டியவள். நீங்கள் ஜாக்கிரதையாக

நடந்துகொள்ளக் கற்றுக் கொள்ள வேண்டும். வங்காளத்திலுள்ள கிராமங்களில் வசிப்பதற்கு விசேஷத் திறமை வேண்டும். அதை நாம் நம்மிடத்தில் உண்டாக்கிக் கொள்ள வேண்டும். நீங்களும் நானும் அந்த பரீக்ஷையில் தேற வேண்டும்."

இரண்டு நாட்களில் மலேரியாவைப் போக்கிக் கொள்ள நான் சமாளித்துக் கொண்டேன். எனக்கு வந்த பிற்பாடு டாக்டர் சுசீலாவுக்கும் அதன்பிறகு கனு காந்திக்கும் வந்தது. அவர்களுக்கும் காந்தியடிகள் மேற்கண்ட கடிதத்தில் காணப்படும் மருந்தில் ஒரு "டோஸ்" கொடுத்தார். இப்பொழுது நாங்கள் எல்லோரும் எங்கள் கிராமங்களில் மெதுவாக நடக்க கற்றுக்கொண்டு வருகிறோம். நாங்கள் தீக்ஷை பெற்றுவிட்டதாக எண்ணி ஆறுதல் அடைகிறோம். வங்காளம் என்பது உலகத்திலுள்ள நோய்களும் நோய்க்கிருமிகளும் சுகமாக வாழும் சொர்க்கலோகமாகும். அதிலிருந்து நாங்கள் உயிரோடு தப்பி வந்துவிட்டால் எங்களை எந்த நோயும் கொல்ல முடியாது என்பது நிச்சயம்.

பத்தியால்பூர், பியாரேலால்.

## பாராட்டுதல்

லுனவாதா மகாராணா 30—11—46-ல் குஜராத்தி பாஷையில் கீழ்க்கண்ட பிரகடனத்தை வெளியிட்டிருக்கிறார் :—

"இனிமேல் சர்க்கார் ரிக்கார்டுகளில் பங்கி, சாமார் போன்ற சகல தாழ்ந்த தீண்டாத வகுப்பார்களை எல்லாம் ஹரிஜன் என்றே குறிப்பிட வேண்டும். முனிசிபாலிடி போன்ற ஸ்தாபனங்களும் அவ்விதமே செய்ய வேண்டும்.

சமஸ்தானத்திலுள்ள சகல பள்ளிக்கூடங்களும் ஆஸ்பத்திரிகளும் இந்தத் தேதி முதல் ஹரிஜனங்களுக்குத் திறந்து விடப்படும். மற்றவர்களைப் போலவே ஹரிஜனங்களும் சர்க்கார் உத்தியோகங்களில் நியமிக்கப்படுவார்கள்.

மற்றவர்களைப் போலவே ஹரிஜனங்களும் சகல குளங்களையும் கிணறுகளையும் பாதைகளையும் உபயோகித்துக் கொள்ளலாம். சமஸ்தானத்திற்குச் சொந்தமான சகல ஆலயங்களும் மடங்களும் ஹரிஜனங்களுக்கு திறந்து விடப்படும்.

நம்முடைய அன்புக்குரிய பிரஜைகள் எல்லோரும் இந்த உத்திரவுப்படியே நடப்பார்கள் என்றும், மற்றவர்களையும் நடக்கும்படி செய்வார்கள் என்றும் நம்புகிறோம். இந்த பிரகடனத்தை சமஸ்தான முழுவதும் தெரியும் படியாகச் செய்யவேண்டும்."

இந்த பிரகடனத்தை வெளியிட்டதற்காக லுனவாதா மகாராணாவைப் பாராட்டுகிறோம். இதன் மூலம் அவர் தீண்டாமை விலக்குக்கு பெரிய சேவை செய்கிறார். ஆனால் உயர்வு தாழ்வு எண்ணம் உள்ளவரை தீண்டாமையை அடியோடு விலக்க முடியாது. சர்க்கார் உத்திரவினாலோ சட்டத்திலோ இதைச் சாதிக்க முடியாது. அவைகள் அதிகமாக உதவி செய்யும் என்பதில் ஐயமில்லை.

ஆனால் பொது ஜனங்கள் அதை முற்றிலும் ஆதரித்தால் அவைகள் வெற்றி பெற முடியும். விஷயமறிந்த அறிஞர்கள் பழக்க வழக்கங்களில் உழலும் பாமர மக்களுக்கு அறிவு புகட்டவேண்டும். சட்டமும் சர்க்கார் உத்திரவும், அத்தகைய ஊழியர்களுக்கு அதிக உதவி செய்யும்.

சர்க்கார் உத்தியோகஸ்தர்கள் எப்படி நடந்து கொள்கிறார்களோ, அதைப் பொறுத்திருக்கிறது இந்த பிரகடனத்தின் வெற்றி. அவர்கள் அனுதாபமுடையவர்களா யிருந்தால் அது வெற்றி பெறும். அவர்கள் இடையூறு செய்வார்களேயானால் அது வெற்றி பெறாது. எந்தப் பெருந்தன்மையான உணர்ச்சியுடன் மகாராணா பிரகடனத்தை வெளியிட்டாரோ, அந்த பெருந்தன்மையான உணர்ச்சியுடனேயே சமஸ்தான உத்தியோகஸ்தர்கள் நடந்து கொள்வார்கள் என்று நம்புகிறேன். அத்துடன் லுனவாதா சமஸ்தானத்தைப் பின் பற்றி மற்ற சமஸ்தானங்களும் நடந்து புகழ்பெறும் என்றும் நம்புகிறோம்.

என். பி.

## ஜனங்கள் பரிவர்த்தனை.

ஸ்ரீ ராம்பூரில் தங்கிய பத்திரிகா நிருபர்கள் காந்தியடிகளிடம் ஜின்னா சாகிப் இந்துக்களையும் முஸ்லீம்களையும் பரிவர்த்தனை செய்யும்படி சொல்லியுள்ள யோசனையைப்பற்றிக் கேட்டார்கள். அதற்கு காந்தியடிகள் கீழ்கண்டவாறு பதில் கூறினார்:—

"ஜனங்களைப் பரிவர்த்தனை செய்வதென்பது முடியாத காரியம். இந்த விஷயம் என்னுடைய மனத்தில் தோன்றியதே யில்லை. எந்த மகாணத்தில் உள்ளவராயிருந்தாலும் இந்தியாவிலுள்ளவர்கள் ஒவ்வொருவரும் இந்தியரே ஆவார்கள். பாக்கிஸ்தான் பரிபூரணமாக ஏற்பட்டாலும் கூட இது போல்தான் இருக்க வேண்டும். ஜனங்களைப் பரிவர்த்தனை செய்தால் இந்தியர்க்கு அறிவோ ராஜ தந்திரமோ இல்லை என்றே அர்த்தமாகும். அதனால் ஏற்படும் பலாபலன்களை எண்ணக் கூட பயமாயிருக்கிறது. இந்தியாவைப் பல மதப்பிரதேசங்களாகப் பிரிப்பது என்பது இயற்கைக்கு விரோதமான காரியமல்லவா.?"

நிருபர்:—

"இப்பொழுது நாட்டில் கலகங்கள் ஏற்படுவதால் ஒரு மதத்தார் வேறிடங்களுக்குப் போய் விடுவது நல்ல தல்லவா?

காந்தி யடிகள்:—

அந்த மாதிரிச் செய்வதற்கு எவ்விதக் காரணமும் எனக்குத் தோன்றவில்லை. அது ஒரு பரிகாரமும் செய்ய முடியாத காலத்தில் கடைசிக் கட்டத்தில் அபூர்வமாகச் செய்ய வேண்டிய காரியமாகும்.

## பெண்களுக்குப் புத்திமதி

காந்தியடிகள் ஸ்ரீ ராம்பூரில் இருந்த பொழுது ஒரு நாள் மாலை வழக்கம் போல் உலாவச் சென்ற பொழுது ஒரு வயலில் வேலை செய்து கொண்டிருந்த பெண்கள் கண்ணீர் பெருகத் தங்கள் துன்பக் கதைகளையும் தங்களுடைய தற்கால நிலைமையையும் அவரிடம் சொன்னார்கள்.

ஒரு கிழவி கண்ணீரைத் துடைத்துக்கொண்டு, "மகாத்மஜீ! நாங்கள் என்ன செய்ய வேண்டும் என்று எங்களுக்குத் தயவு செய்து சொல்லுங்கள். எங்களுடைய உயிருக்கும் சொத்துக்கும் பாதுகாவலில்லாமலிருக்கும் பொழுது நாங்கள் எப்படி எங்களுடைய கிராமங்களில் வசிக்க முடியும்?" என்று கேட்டாள். அதற்குக் காந்தியடிகள் கூறியதாவது:—

"நான் நோவக்காளிக்கு வந்தது முதல் நீங்கள் எல்லோரும் பயத்தை விட்டு ஒழித்து விடவேண்டும் என்று கூறிவருகிறேன். நீங்கள் அந்த விதமாக நடந்து கொண்டால் நீங்கள் தைரியமாக இங்கே வாழலாம், கடவுளை நம்புங்கள். அவருக்கு மட்டும் பயந்து நடவுங்கள். வேறு யாருக்கும் பயப்பட வேண்டாம். அவரிடம் பிரார்த்தனை செய்து கொள்ளுங்கள்."

மது குடிப்பவன் முதலில் அறிவுள்ளவன், பின்னர் முட்டாள், இறுதியில் விலங்கு —ஷேக்ஸ்பியர்

# தமிழ் ஹரிஜன்

தமிழ்ப்பண்ணை வெளியீடு; ஆசிரியர் பொ. திருகூட சுந்தரம், நாமக்கல் கவிஞர்

ஜனவரி 12, ஞாயிறு 1947


## காந்தியடிகள் கடிதம்

காந்தியடிகள் ராஜகோட்டிலுள்ள திரு. நாரன் தாஸ் காந்திக்கு எழுதிய கடிதம் வருமாறு :—

நான் வழக்கப்போல் உணவு உண்ண ஆரம்பித்து விட்டேன். அதனல் இனிமேல் கவலைப்படக் காரணமில்லை. அதுவும் தவிர, முன் கூட்டி யோசனை செய்து, எந்தக் காரியத்தையும் செய்தால், கவலைப் படுவதற்கு இடம் கிடையாது. நான் தற்சமயம் மேற்கொண்டுள்ள காரியம் என் வாழ் நாளில் இதுவரை காணத அளவு அதிக சிக்கலும் கஷ்டமும் நிறைந்த காரியமாகும்.

கார்டினல் நியூமென் என்னும் ஆங்கில கவிஞர், கீழ்க் கண்டவாறு பாடுகிறர் :—

" இருள் நிறைந்த இரவு. வீட்டை விட்டு வெகு தூரம் வந்துவிட்டேன். கடவுளே, நீரே எனக்கு வழி காட்டி அருளும் !"

இந்த கவிஞர் பாடுவது போலவே நானும் பாடலாம். அதுதான் என்னுடைய நிலைமை. இத்தகைய இருளை இதற்கு முன் எந்தக்காலத்திலும் நான் அனுபவித்ததில்லை. இரவும் சீக்கிரமாக விடியு மென்று தோன்ற வில்லை. ஆனல், நான் சோர்வடையவுமில்லை, ஏமாற்ற மடையவுமில்லை. அதுதான் எனக்கு கிடைத்துள்ள ஒரே ஆறுதலாகும். நான் எந்த கஷ்டத்துக்கும் தயாராயிருக்கிறேன். 'செய் அல்லது செத்துப்போ' என்பது இங்கே சோதனை செய்யப்பட்டு வருகிறது. ஹிந்துக்களும், முஸல்மான்களும் ஒன்று சேர்ந்து அமைதியுடனும், அன்புடனும் வாழ்வதற்குக் கற்றுக்கொள்ள வேண்டும். அதுதான் நான் செய்யவேண்டிய காரியம். அது முடியா விட்டால், நான் செத்துப்போக வேண்டும். அது உண்மையில் ஒரு கஷ்டமான காரியம். கடவுள் சித்தப்படி நடக்கட்டும்.

என்னுடைய தோழர்கள் எல்லோரும் இந்தப் புனிதமான வேலையில் முற்றிலும் மனமுவந்து ஈடுபட்டிருக்கிறர்கள். அவர்களில் யாருக்கேனும், இது முடியாது என்று தோன்றினல் அவர் ஊருக்குப் போய் விடலாம் என்று சொல்லி இருக்கிறேன். ஒவ்வொருவரும் தாம் இருந்து வேலை செய்யப்போகும் கிராமத்தைத் தாமே தேர்ந்தெடுத்திருக்கிறர்.

ஒவ்வொருவருடனும் வங்காளி மொழி பெயர்ப்பாளர் ஒருவர் இருக்கிறர். தங்கள் குமாரன் கனுவும் ஒரு கிராமத்துக்கு அனுப்பப்பட்டிருக்கிறர். கனுவின் மனைவி அபா வேறொரு கிராமத்தில் இருக்கிறர். நான் இங்கு வெகுதூரத்தில் ஒரு துர்ப்பாக்யமான கிராமத்திலிருக்கிறேன். நான் இங்கே வெகு தூரத்தில் இருக்கிறேன். பாஷைக் கஷ்டத்தின் காரணமாக பரசுராம் தனியே இருக்க முடியவில்லை. அதனல் என்னுடன் இருக்கிறர். அவர் ஆடம்பரமின்றி வேலை செய்யும் ஊழியர். அதிக திறமையுள்ள சுருக்கெழுத்து எழுதுபவர். என்னுடன் ஒரு வங்காளி ஆசிரியரும் இருக்கிறர். இருவரும் எனக்கு வேண்டிய காரியங்களைப் பார்த்துக்கொள்கிறர்கள். மற்ற தோழர்கள் எல்லோரும் பத்து மைல் தூரத்தில் இருந்துகொண்டிருக்கிறர்கள். அவசியமானல் அவர்கள் என்னை வந்து பார்க்கலாம். பியாரேலாலும், சுசிலா நய்யாரும், சுசீலாபாயும் வேறு வேறு கிராமத்தில் இருக்கிறர்கள். கனு நிரம்ப சந்தோஷமாயிருக்கிறர். ராம் துன் பஜனை நடத்திக் கொண்டிருக்கிறர். ஒழுங்கான வழக்கங்கள் உடையவர். கடவுள் அவருக்கு நல்ல திடகாத்திரமான சரீரத்தை கொடுத்திருக்கிறர். அபா தக்கர் பாபாவோடு இருக்கிறள். அவர்கள் பதினறு மைல் தூரத்தில் இருக்கிறர்கள். பாபா அவளை நன்ருக கவனித்துக்கொள்கிறர். அவளுடைய சேவா உணர்ச்சியைக் குறித்து அவருக்கு மிகுந்த சந்தோஷம். அவள் அவருக்கு குஜராத்தி தேசத்துச் சப்பாத்தி செய்து கொடுக்கிறள். அவள் ஒரு வங்காளப் பெண். ஆதலால் வங்காளப் பெண்களிடையே நல்ல வேலை செய்யக் கூடியவளாயுமிருக்கிறள். அவளுக்கு என்னை விட்டுப்போக பிரியமில்லை. ஆனல் கடமையைச் செய்வதற்காகவே சென்றிருக்கிறள். அதனலேயே நான் அவளை அனுப்பி வைத்திருக்கிறேன். அவள் எனக்குச் சேவை செய்து வந்த படியால் அது எனக்குப் பழக்கமாகிவிட்டது. ஆனல் ஒரு குறிப்பிட்ட மனிதரே எப்பொழுதும் எனக்கு சேவை செய்வதென்பது என்னுடைய துறவறத்திற்கு முற்றிலும் முரண்பட்டதாகும்.

இதிலிருந்து நீங்கள் நான் எதைச் செய்த போதிலும் கடமையுணர்ச்சியின் காரணமாகவே செய்கிறேன் என்பதைத் தெரிந்து கொள்வீர்கள். இதைக் குறித்து நீங்கள் எல்லோரும் சந்தோஷப்பட வேண்டும். நீண்ட கடிதம் எழுதி விட்டேன். நீங்கள் உங்கள் உங்கள் காரியங்களில் முழு மூச்சாக ஈடுபட வேண்டுமென்று விரும்புகின்றேன்.

என்னுடைய ஆசீர்வாதம்.

5—12—46 — பாபு.

## காந்தியடிகளின் சோதனை.

காந்தியடிகள் நான் நோயாய் இருந்த பொழுது எனக்கு அனுப்பிய கடிதத்தில் " குணமான உடன் இங்கே வா! 'செய் அல்லது செத்துப்போ' என்னும் ஸ்லோகத்தின் பொருளை இன்னும் உனக்கு அதிகமாக விளக்கிச் சொல்கிறேன்" என்று எழுதியிருந்தார். அப்படியே நான் ஸ்ரீ ராம்பூருக்குச் சென்றேன். போகும் வழியில் அவரைச் சந்தித்தேன். அவர் நிர்மல் பாபுவுடன் காலையில் உலாவ வந்திருந்தார். வழியில் ஒரு வாய்க்காலை கடக்க வேண்டியிருந்தது. அதைக் கடக்க அதன் மீது ஒரே ஒரு கட்டைதான் போட்டிருந்தது. அதிக திறமையுடன் செய்திருப்பதாக காந்தியடிகள் கூறினர். அதைக் கடக்க கழைக் கூத்தாடியின் சாமர்த்தியம் தேவையாகும். காந்தியடிகள் தனியாகச் செல்ல ஆரம்பித்தார். ஆயினும் நிர்மல் பாபு பக்கத்தில் நின்றது நல்லதாயிற்று. காந்தியடிகள் அவருடைய தோளில் கை வையாதிருந்தால் கீழே விழுந்திருப்பார். 78-வயதான பிறகு இளைஞர் மாதிரி நடக்க முடியுமா?

அன்று அவர் என்னிடம் தன்னுடைய மனத்திலுள்ளது முழுவதையும் கூறினர். அவர் எவ்வளவோ வேண்டிக்கொண்டும் கிழக்கு வங்காளத்திலிருந்து ஜனங்கள் வெளியேறுவது இன்னும் நிற்க வில்லை. எங்கு பார்த்தாலும் இராணுவ உதவியும் போலீஸ் உதவியும் வேண்டுமென்ற கோரிக்கை நாளுக்கு நாள் அதிக மாகவே கேட்கப் படுகிறது. சுதந்திரம் வேண்டுமானல் இந்த உதவிகளை கேட்கக் கூடாதென்று காந்தியடிகள் ஜனங்களிடம் சொல்கிறர். ராணுவ உதவியும் போலீஸ் உதவியும் இல்லாமல் போனல் என்ன செய்ய முடியும் என்று கேட்டால் அதற்கு அவர் பலவானுடைய அஹிம்சையை கைக் கொள்ள வேண்டுமென்று பதில் கூறுகிறர். அந்த யோசனை அவர்களுக்குப் புதிது.

அவர்கள் விளங்காமல் திகைக்கிறார்கள். அதற்காக அவர் அவர்கள் மீது குறை கூறவில்லை. ஏனெனில் அவரே அதை பரிபூர்ணமாக அனுஷ்டித்தாக வில்லை. சில காலத்திற்கு முன் நண்பர் ஒருவர், அவரிடம் "நம்பிக்கையிருந்தால் எதையும் சாதிக்கலாம். ஏசு கிறிஸ்து சொன்ன மாதிரி மலையைப் பார்த்து விலகி நில் என்று சொன்னாலும் கூட மலை விலகி நிற்கும்" என்று சொன்னார். இதைச் சொல்லி விட்டு காந்தியடிகள் கூறியதாவது:—

"எனக்கு அத்தகைய நம்பிக்கை இருக்கிறதா? நான் பாழாக்கப்பட்ட இந்தக் கிராமத்தில் தனியாக வசிப்பதற்காக வந்திருக்கிறேன். ஆயினும் நான் விரும்புகிறபடி இன்னும் தன்னந் தனியனாக இருக்க முடியவில்லையே. நான் கடவுளிடம் எனக்குள்ள நம்பிக்கையை சோதனை செய்து பார்க்க விரும்புகிறேன். கடவுள் என்னைக் கொண்டு ஏதேனும் காரியத்தை நிறைவேற்றிக் கொள்ள விரும்புவாரானால் எனக்கு என்ன அபாயம் வந்தாலும் என்னைக் காப்பாற்றுவது நிச்சயம். அப்படியிருக்க நான் ஏன் மரணத்திற்குப் பயப்பட வேண்டும்? எனக்கு உடம்பில் பழையபடி பலம் வந்த உடனே வயல்களில் தண்ணீர் வற்றியதும் நான் கால் நடையாக கிராமம் கிராமமாகச் சென்று ஜனங்களுக்கு அஞ்சாமை என்னும் ஹிதோபதேசத்தை கூற எண்ணி இருக்கிறேன். நான் எந்த கிராமத்திலிருந்து புறப்படுகிறேனோ அந்த கிராமத்துக்குத் திரும்பி வரமாட்டேன். போகுமிடங்களிலெல்லாம், அங்குள்ள ஜனங்களின் உதவியைப் பெற்றே வாழ்ந்து வருவேன்"

காலஞ் சென்ற மகாதேவ் தேசாய் என்னிடம் "காந்தியடிகளை ஜாக்கிரதையாக கவனித்து வர வேண்டும். என்றேனும் ஒரு நாள் அவரும் டால்ஸ்டாயைப் போலவே செய்ய ஆரம்பித்து விடுவார். நம்மைவிட்டுத் தனியாகப் புயல் காற்றில் நடக்கத் துணிந்து விடுவார்" என்று என்னிடம் அடிக்கடி கூறுவது வழக்கம். அவர் கூறிய ஜோஸியம் அநேகமாக பலித்து வருவதாகவே தோன்றுகிறது.

கல்கத்தா சர்வகலாசாலையைச் சேர்ந்த ஆசிரியர் அமீய சக்கரவர்த்தி அவரைப் பார்க்க வந்திருந்தார். அவர் சாப்பிட்டுக் கொண்டிருக்கும் சமயத்தில் காந்தியடிகளிடம் கீழ்க்கண்ட கேள்வியைக் கேட்டார்.

அக்கிரமிகள் தாங்கள் செய்தது தவறென்று உணரவுமில்லை. அதற்காக பச்சாதாபப் படவுமில்லை. அதற்குப் பதிலாக சந்தோஷப்படவே செய்கிறார்கள். அவர்களைத் திருத்துவது எப்படி? அதற்குக் காந்தியடிகள் கூறிய பதிலாவது :—

"ஆம், அவர்கள் சந்தோஷப்படுவதற்கு அவர்களுக்குக் காரணமில்லாமல் இல்லை. ஆனால் அவர்கள் மனோபாவத்தை எதிர்த்து மாற்றுவதற்குள்ள ஒரே வழி யாதெனில், அதற்குக் கீழ்ப்படிந்து விடாமல் அவர்களிடையே உண்மையுடன் வாழ்வதேயாகும். அன்பு இருந்தால் மட்டும் போதாது. அதனுடன் அறிவுமிருக்க வேண்டும். இதை நான் அனுபவத்தில் கண்டிருக்கிறேன். ஒழுக்கமும் மனோதைரியமும் உள்ளவர்களுக்கு அத்தகைய பகுத்தறிவு உண்டாகும். அதை நாம் அபிவிருத்தி செய்ய வேண்டும். நெருக்கடியான சந்தர்ப்பத்தில் எப்பொழுது பேசுவது? எப்பொழுது பேசாமல் இருப்பது? எப்பொழுது காரியம் செய்வது? எப்பொழுது காரியம் செய்யாமல் இருப்பது என்பதை அறிந்து கொள்ளவேண்டும். இந்தமாதிரி சந்தர்ப்பங்களில் காரியம் செய்வதும் காரியம் செய்யாமலிருப்பதும் ஒன்றேதான்.

நான் வெளிச்சமில்லாமல் இருட்டில் தடவிக் கொண்டிருக்கிறேன். ஆயினும் உண்மையானது காட்டும் வழியே செல்ல வேண்டியவனானேன். இந்த கஷ்டமான சந்தர்ப்பத்தில் தேவையான பொறுமை என்னிடமில்லை. என்னை சூழ்ந்துள்ள இருளை எந்த முறையில் நீக்குவது என்பது எனக்குத் தெரியவில்லை. ஆதலால் என்னுடைய நண்பர்களை என்னிடம் பொறுமைகாட்டும்படியாகக் கேட்டுக் கொள்கிறேன்.

ஆதலால் புதிய முறையில் காரியம் செய்ய எண்ணியிருக்கிறேன். தற்காலிகமாக ஒரு வங்காளியாகவும் நோவாகாளி ஜில்லாவைச் சேர்ந்தவனாகவும் ஆகி இருக்கிறேன். ஹிந்துக்களையும் முஸ்லிம்களையும் ஒன்றாக இணைப்பது அல்லது உயிரைத் துறப்பது என்ற மனவுறுதியுடன் இங்கே வந்திருக்கிறேன். இங்கே தீயானது பிரமாதமாக எரிந்துகொண்டிருக்கிறது. அதை அணைக்கும்வரை இந்த இடத்தை விட்டு நகரமாட்டேன்.

துன்பப்பட்ட மக்களை சுகமாக வாழும்படி செய்ய வேண்டும். அதற்கான நிர்மாண வேலைகளெல்லாம் செய்து அவர்களுடைய உடம்பையும் உள்ளத்தையும் ஒருங்கே புனருத்தாரணம் செய்யவேண்டும்.

அதன்பின் ஆசிரியர் சக்கரவர்த்தி "தங்களுடைய தோழர்கள் பல கிராமங்களில் வேலை செய்துகொண்டிருக்கிறார்கள். அவர்களுடைய வேலைகளைப்பற்றி அவர்கள் எழுதும் அறிக்கைகளை ஒன்று சேர்த்து ஒழுங்குபடுத்தி வெளியிட்டால் நீங்கள் கிழக்கு வங்காளத்தில் புதிகாக சிருஷ்டித்துவரும் பலவானுடைய அஹிம்ஸா முறையை அறிந்துகொள்ள உதவியாயிருக்கும்" என்று கூறினார்.

அதற்குக் காந்தியடிகள் கூறியதாவது :—

"அப்படிச் செய்வதற்குரிய காலம் இன்னும் வரவில்லை. அவர்களை நான் ஆசீர்வதித்து அனுப்பியிருக்கிறேன். ஆனால் அங்குள்ள சூழ்நிலை அவர்களுக்கு உதவி செய்வதாக இல்லை. அவர்கள் நடந்து பழக்கமான பாதையில் செல்லவில்லை. பாதையில்லாத பரந்த வெளியிலேயே போய்க்கொண்டிருக்கிறார்கள். கோபமுள்ள ஜனங்களிடையே வேலை செய்கிறார்கள். இங்குள்ள பாஷையும் மற்ற விஷயங்களும் அவர்களுக்குத் தெரியாது. அடுத்ததாகச் செய்ய வேண்டியது யாது என்பது எனக்குக் கூடத் தெரியவில்லை. அதனால் நான் அவர்களுக்கு வழி காட்ட முடியாது. அவர்களும் அதனால் அறிக்கை அனுப்ப முடியவில்லை. இன்ன வேலை செய்ய வேண்டுமென்று குறிப்பிட்டுக் கொடுத்தால்தானே அவர்கள் அறிக்கை அனுப்ப முடியும்? நம்முடைய பெரியார் தக்கர் பாபா என்னுடைய வயதுடையவர். சேவை செய்வதில் பண்பட்டவர். அணுவளவுகூட சுயநலமில்லாதவர். எந்தக் காரியத்தையும் முன்கூட்டி யோசியாமல் செய்யாதவர். இப்பொழுது அவருங்கூட என்ன செய்கிறோம் என்பது தெரியாமலேதான் செய்துகொண்டிருக்கிறார். இப்பொழுது எங்களுக்கு ஏற்பட்டிருக்கும் குழப்பத்தை அவசியமானதொரு குழப்பமாகவே கருதுகிறோம். குழப்பம் நீங்கி ஒழுங்கு உண்டாகுமென்றே நம்புகிறேன். அப்பொழுது வருங்காலத்து ஊழியர்களுக்கு உபயோகமாக நம்முடைய அனுபவங்களை எழுதி வைக்கலாம்."

ஆசிரியர் சக்கரவர்த்தி :—

"அப்படித்தான் நம்முடைய ஜனங்களும் அயல்நாட்டு ஊழியர்களும் எண்ணுகிறார்கள். நோவாகாளி இப்பொழுது ஒரு பெரிய சோதனை சாலையாக ஆகி இருக்கிறது. இங்கே சரியான பரிகாரம்

என்னே என் துர்அதிர்ஷ்டம்! தாய்நாட்டிற்காக இறப்பது ஒரு முறைதானே? —அடிஸன்

கண்டு பிடிக்கப்படுமானால் உலகத்தில் தோன்றும் சச்சரவுகளை எல்லாம் அதைக்கொண்டு எளிதில் தீர்த்து விடலாம்.''

காந்தியடிகள் :—

அவ்விதமாகத்தான் லண்டனிலிருந்து கூட எனக்குக் கடிதங்கள் வந்துகொண்டிருக்கின்றன. ஜனங்கள் நோவாகாளியில் நடப்பவைகளை வெகு ஜாக்கிரதையாகக் கவனித்து வருகிறார்கள். ஆதலால் என்னுடைய பொறுப்பு அதிகமாகின்றது. நாம் உண்மையாக உழைக்க வேண்டியவர்களாகவும் இருக்கிறோம்.

ஆசிரியர் சக்கரவர்த்தி :—

''ஜனங்கள் சொல்ல முடியாத அளவு கஷ்டப்பட்ட போதிலும் தாங்கள் இந்தப் பெரிய காரியத்தைச் செய்வதற்கு வங்காளத்தைத் தெரிந்தெடுத்தது எங்களுடைய பாக்கியமேயாகும். வங்காள முழுவதும் அதை உணர்ந்து இருக்கிறது.''

காந்தியடிகள் :—

இந்தச் சோதனையில் நான் வெற்றி பெற்றால் இதுவே என் வாழ்வின் சிகரமாகும். நான் கீழே இறங்கி கிழக்கு வங்காளத்திற்கு வந்திருக்கிறேன். இப்படிச் செய்யப் போவதாக முதன் முதலாக ஜவஹர்லாலிடமே சொன்னேன். அவர் ஒரு நிமிஷங்கூட தயங்காமல் 'ஆம் நீங்கள் அங்கே போகவேண்டியது தான். நீங்கள் இங்கே இருக்க வேண்டுமென்று நாங்கள் எண்ணினாலும் நீங்கள் நோவாகாளியில் இருக்கவேண்டுமென்றே எண்ணுகிறோம், என்று சொன்னார். அப்படியானால் எப்பொழுது போகட்டும் என்று கேட்டேன். அதற்கு அவர் ''எப்பொழுது போகவேண்டு மென்று தோன்றுகிறதோ அப்பொழுது'' என்று பதிலுரைத்தார். அதன் பிறகு இரண்டு நாளில் நான் புறப்பட்டேன்.''

பின்னர் நான் விடைபெற்றுக்கொண்டு வந்தேன் அதன்பின் மறுபடியும் ஒரு வாரம் கழித்துப் பார்த்தேன். அப்பொழுதும் அவர் 'இன்னும் இருட்டில் தான் தடவிக்கொண்டிருக்கிறேன்' என்று கூறினார். அதன்பின் எழுதிய கடிதத்தில் கீழ்க்கண்ட வாறு தம் ஆத்ம வேதனையை அறிவித்திருந்தார் :—

''இன்னும் நான் அஹிம்சையை அனுஷ்டிப்பதற்குரிய முறையைக் காண வில்லை. இங்கே நான் ஒரு பெரிய யாகத்தைச் செய்ய வேண்டியவனாக இருக்கிறேன். ஆனால் அதற்குரிய ஆற்றல் என்னிட மில்லை என்பது ஒவ்வொரு நிமிஷமும் தெரிந்து கொண்டு வருகிறது. ஆயினும் நான் ஓடிவிட மாட்டேன். ஓடுவதானாலும் எங்கே ஓடமுடியும்? வெற்றியும் தோல்வியும் நம்வசம் இல்லை. நாம் நம்முடைய கடமையைச் சரியாகச் செய்தால் போதும். முயல்லதே நமது கடமை. முடிவு கடவுள் இஷ்டப்படியே தான் இருக்கும்.''

காந்தியடிகள் மற்றொரு நண்பரிடம் கீழ்க்கண்ட வாறு கூறினார் :—

''தோற்றுவிட்ட தாகக் கூறிக்கொண்டு நான் வங்காளத்தை விட்டுப் புறப்பட்டு வரத் தயாராயில்லை. அவசியமானால் அக்கிரமிகள் கையால் உயிர் துறக்கச் சித்தமாயிருக்கிறேன். ஆனால் நான் அதை விரும்பவுமில்லை, அதைத் தேடிப்போகவும் மாட்டேன். என்னைப் போலவே என்னுடைய தோழர்களும் நடக்க வேண்டுமென்று விரும்புகிறேன்.''

நான் என்னுடைய கிராமத்தில் வேலை செய்யும்பொழுது என்னை அறியாமலே பல கஷ்டங்களில் சிக்கிக் கொண்டேன். அப்பொழுது அவர் எனக்குக் கீழ்கண்டவாறு எழுதினார் :—

''மிகுந்த அபாயகரமான காரியமென்று நான் தொடக்கத்திலேயே சொன்னேனல்லவா? இந்த ஜன்மத்தில் இதைவிட அபாயகரமான காரியம் எதுவும் ஏற்படப்போவதில்லை. நாம நம்மைக் கடவுள் கையில் ஒப்புவித்து விடவேண்டும் அவருடைய சித்தப்படி நடக்கட்டும். அனாவசியமாக அபாயத்தில் சிக்கிக்கொள்ள வேண்டாம். ஆனால் அபாயம் தானாக வந்தால் அதை அஞ்சாமல் எதிர்த்து நிற்கவும் வேண்டும். இந்த விஷத்தில் நாம் எல்லோரும் அழிந்து போனாலும், அதற்காக நான் கொஞ்சம் கூட வருந்த மாட்டேன்.''

அடுத்த கடிதத்தில் அவர் 'நான் ஒவ்வொருநிமிஷமும் என்னை வரவர அதிகமாக கடவுள் கையில் ஒப்புவித்துக்கொண்டிருக்கிறேன்'' என்று எழுதினார்.

பத்தியால்பூர். — பியாரேலால்.

## ஸ்ரீராம்பூர்

சிலநாட்களுக்குமுன் காந்தியடிகளைப் பார்ப்பதற்காக சில நண்பர்கள் கல்கத்தாவிலிருந்து ஸ்ரீராம்பூருக்கு வந்திருந்தார்கள். அவர்களில் ஒருவர் கீழ்கண்டவாறு கூறினார் :—

மனித ஜாதியைத் தாழ்ந்த நிலையிலிருந்து உயர்ந்த நிலைக்குக் கொண்டு வருவதற்காகவே நீங்கள் முயன்று கொண்டிருக்கிறீர்கள் என்று நாங்கள் நம்புகிறோம். ஆயினும் உங்களுக்கு வெற்றி கிடைக்கும் விஷயத்தில் எங்களுக்குச் சந்தேகமாகவே இருக்கிறது.

காந்தியடிகள் :—

எனக்கும் சந்தேகமாகத்தான் இருக்கிறது. வெற்றி பெற்றாலும் பெறலாம். ஆனால் அந்த முயற்சியில் உயிர்துறக்க என்னால் முடியும் என்றே எண்ணுகிறேன். இந்தச் சோதனையை வெற்றி தோல்வியைக் கொண்டு மதிப்பிடக் கூடாது.

நண்பர் :—

ஆம் அது சரிதான்.

காந்தியடிகள் :—

இறுதிவரை விடாப்பிடியாக முயற்சி செய்வதைக் கொண்டுதான் மதிப்பிடவேண்டும்.

நண்பர் :—

அதிகாரிகளுடைய மனப்பான்மையில் ஏதேனும் மாற்றம் உண்டாகி இருக்கிறதா?

காந்தியடிகள் :—

அரசாங்கத்தின் கொள்கையில் நல்ல விதமான மாற்றம் உண்டாகி இருக்கிறது. நீங்களும் நானும் உழைத்தால்தான் மனப்பான்மையில் மாற்ற முண்டாக்க முடியும்.

நண்பர் :—

ஹிந்துக்கள் மனச் சோர்வு அடைந்திருப்பதைக் காண வருத்தமாயிருக்கிறது.

காந்தியடிகள் :—

அது ஹிந்துக்களுக்குத் தான் ஏகபோக உரிமை என்று எண்ண வேண்டாம். நம் எல்லோரிடமும் உள்ளது தான். இந்த மனச் சோர்வைப் போக்குவதற்கு நான் ஒருவனாகத் தனித்து நிற்பினும் இறுதி வரை போராடவே செய்வேன். நான் இங்கே வந்திருப்பது எந்த சமூகத்திற்கும் நன்மை செய்வதற்காக அல்ல. எனக்கு நன்மை செய்து கொள்வதற்காகவேவந்திருக்கிறேன். அஹிம்ஸையை யாரும் சமூகத்தை விட்டு தனியாக நின்று அனுஷ்டிக்க முடியாது. சமூகந்தான் அதை அனுஷ்டிக்க முடியும். அதை பரீக்ஷித்துப் பார்ப்பதற்காகவே இங்கே வந்திருக்கிறேன். என் அஹிம்ஸை திவாலாகி விட்டதா? நான் தோல்வி அடைந்தால் அதைக் கொண்டு அஹிம்ஸா தர்மம் தவறு என்று சொல்லி

*அன்னிய அரசனே பொது ஜன அபிப்பிராயத்தை அலட்சியம் செய்வான் —காந்திஜி*

விட முடியாது. நான் சரியாக அனுஷ்டிக்க வில்லை என்று தான் சொல்ல முடியும்.

நண்பர் :—

தாங்களும் ஜவஹர்லாலும் பீஹார் விஷயத்தில் மேற்கொண்ட மாதிரி முஸ்லிம் லீக் தலைவர்கள் நோவாகாளி விஷயத்தில் சிரத்தை மேற்கொண்டால் ஒரே நாளில் அமைதியை உண்டாக்கிவிட முடியும்.

காந்தியடிகள் :—

இந்த மாதிரி ஒப்பிட்டுப் பார்ப்பது நம்மை நாமே இழிவு படுத்திக் கொள்வதாகும். நாம் எவ்வளவுக்கெவ்வளவு நம்முடைய மனத்தையே அதிகமாக சோதித்துப் பார்த்துக் கொள்கிறோமோ, அவ்வளவுக் கவ்வளவு நல்லது. நான் இங்கே முஸல்மான்களுக்கு மட்டு மின்றி ஹிந்துக்களுக்கும் உபதேசம் செய்யவே வந்திருக்கிறேன். ஹிந்துக்கள் என் இவ்வளவு பெரிய கோழைகளா யிருந்தார்கள்? மனோதைரிய விஷயத்தையும், உடல் வன்மையையும், வீரத்தையும் கவனித்தால் ஹரிஜனங்கள் மற்றவர்களை விட சிறந்தவர்களாகக் காணப்படுகிறார்கள். அவர்கள் தைரிய முடையவர்களாக இருக்கிறார்கள். மற்ற ஹிந்துக்கள் ஜாதிவித்தியாசங்களை ஒழித்துவிடவேண்டும். இங்கு நடந்த அட்டூழியங்கள் ஹிந்துக்களுடைய கண்களைத்திறநது தீண்டாமையை ஒழிக்கும்படி செய்யுமானால், அவைகளும் ஒரு நல்ல காரியம் செய்தனவே யாகும்.

சாம்பாரான் சத்தியாக்கிரக காலத்தில் நான் ஒரு சமயம் ராஜேந்திர பாபு வீட்டுக்குப் போயிருந்தேன். அப்பொழுது அவர் வீட்டில் இல்லை. அங்கிருந்த வேலைக்காரர் என்னை உள்ளே போகச் சம்மதிக்கவில்லை. வெளியிலேயே உட்கார்ந்திருந்தேன். தோட்டத்திலிருந்த கிணற்றில் குளிக்கப்போனேன். அதுவும் கூடாது என்று வேலைக்காரர் சொன்னார். அந்த நிலைமை இப்பொழுது மாறி இருக்கிறது. ஆயினும் செய்ய வேண்டிய காரியங்கள் பல உள.

நண்பர் :—

ஆம், அது உண்மைதான். இங்கே அக்கிரமமாக முஸ்லிம்களாக ஆக்கப்பட் டிருக்கிறார்களே, அவர்களைச் சீக்கிரமாக மறுபடியும் ஹிந்து மதத்தில் சேர்த்துக் கொள்ளா விட்டால் ஹிந்துக்கள் முஸ்லிம்களிடையில் ஏற்பட்டுள்ள பிளவு மாறாமல் நின்றுவிடும்.

காந்தியடிகள் :—

ஆம், அது உண்மைதான். அநேகர் ஹிந்து மதத்திற்கு வந்து விட்டார்கள். எல்லோரையும் வரும்படி செய்ய வேண்டும். மதவிஷயத்தில் சகிப்புத்தன்மை வேண்டும்என்பது என்கொள்கை. இப்பொழுது அது மட்டும் போதாது. எல்லா மதங்களையும் சரிசமமாக மதிக்கவேண்டும் என்ற கொள்கையை மேற்கொண்டிருக்கிறேன். சகல மதங்களும் ஒரே மரத்தின் கிளைகளாகும். ஆனால் நான் உலக சுகத்தை எண்ணி ஒரு கிளையிலிருந்து மற்றொரு கிளைக்குப் போய்விடக் கூடாது. அப்படிப் போனால், நான் உட்கார்ந்திருக்கும் கிளையை நானே வெட்டியவனாவேன். ஆதலால் தான், மனமொப்பாத மதமாற்றங்கள் ஏற்பட்டால் எனக்கு அதிக வருத்த முண்டாகிறது. உண்மையான மத மாற்றங்கள் ஒரே காலத்தில் கூட்டங் கூட்டமாக நடைபெற முடியாது. உயிரையோ, பொருளையோ காப்பாற்றுவதற்காக ஏற்படும் மத மாற்றங்கள், உண்மையான மத மாற்றங்கள் ஆகா. தென்னிந்தியாவில் ஒரு கிறிஸ்தவ பாதிரியார் இருந்தார். அவர் ஹரிஜனா யிருந்து கிறிஸ்தவர் ஆனவர். வேறு மதத்திற்குப் போன போதிலும் “ ஹரிஜன் ” என்ற தாழ்ந்த உணர்ச்சி அவரை விட்டு நீங்க வில்லை. “ எனக்கென்னவோ நான் ஒரு பாதிரி யாகமாட்டேனென்றே தோன்றுகிறது. ” என்று அவா காலஞ்சென்ற தீனபந்து ஆண்ட்ரூஸிடம் கூறினார்.

நண்பர் :—

இங்கே நடந்த அசுரத் தன்மை வாய்ந்த அக்கிரமங்களுக்கு அளவே கிடையாது. அவைக ளெல்லாம் மதத்தின் பேராலேயே செய்யப்பட்டன. அவற்றை நினைத்தால் ஒன்றுமே ஓட வில்லை.

காந்தியடிகள் :—

நான் சிறுவயதிலிருந்தே அநேக மனித உருவமுடைய அசுரர்களைப் பார்த்திருக்கிறேன். ஆனால் அவர்களுடைய ஹிருதயத்தை இளக்கக் கற்றுக்கொண்டால் அவர்களையும் நல்லவர்களாக்கிவிடமுடியும், என்பதையும் பார்த்திருக்கிறேன். இங்கே அட்டூழியங்கள் நடந்தது வாஸ்தவந்தான். ஆனால் நீங்கள் அதை மிகைப்படுத்திச் சொல்லவேண்டாம். எத்தனை நடந்தன என்பதைப் பற்றி எனக்குக் கவலையில்லை. ஒரே ஒரு அக்கிரமம் நடந்தாலும் போதும் என்று நான் அதிகாரிகளிடம் சொன்னேன். அவர்கள் அக்கிரமங்கள் நடந்தன என்பதை ஒப்புக்கொள்ளவே செய்கிறார்கள்.

நண்பர் :—

கடத்திச் செல்லப்பட்ட பெண்கள் விஷய மென்ன ? அவர்கள் இருக்குமிடம் தெரிந்து இராணுவப்போலீஸுடன் சென்றால் அக்கிரமிகள் அவர்களை வேறு இடத்திற்குக் கொண்டு போய் விடுகிறார்கள்.

காந்தியடிகள் :—

ஜனங்கள் இராணுவ உதவியையும், போலீஸ் உதவியையும் எதிர்ப்பார்க்கக்கூடாது. நீங்கள் ஜனநாயகத்தை நிலை நாட்ட வேண்டியவர்கள். இராணுவ உதவியை நாடுவதும், ஜனநாயகமும் முரண்பட்டவைகளாகும். இராணுவம் நம்மை இழிவாகவேசெய்யும். ஜனங்கள் அக்கிரமியை தலைவனாக்கினால் அதன் பலன்களை அனுபவிக்க வேண்டியதுதான். ஆனால் ஜனங்களை சத்தியாக்கிரகத்தைக் கொண்டு திருத்த வேண்டும். அதுதான் ஜனநாயகம். பீஹாரானாலும் வங்காளமானாலும் ஜனங்கள் மனோதைரியமுடையவர்களாகவும் பிறர் உதவியை நாடாமல் பிழைக்கக் கூடியவர்களாகவும் இருக்கவேண்டும். வீட்டை விட்டு ஓடாமல் எதிர்த்து நின்று உயிர் துறக்கச் சித்தமாயிருக்க வேண்டும்.

நண்பர்:—

ஜவஹர்லால் பீகாருக்குப் போய் அட்டூழியங்களை அடக்கினாரே, இங்கு வந்துஒன்றும்செய்யவில்லையே, ஏன்? மாகாண சுய ஆக்ஷி நடப்பதால் இடைக்கால சர்க்கார் தலையிட முடியாது என்று சொன்னால் பீகாரில் மட்டும் எப்படித் தலையிடமுடியும் ?

காந்தியடிகள்:—

ஜவஹர்லால் இடைக்கால சாக்காரில் பிரதம மந்திரி என்று மட்டும் எண்ண வேண்டாம். அவர் தேசத்தின் பிரதம ஊழியரும் ஆவார். பிரதம மந்திரி என்னும் ஸ்தானத்தில் மாகாண சுய ஆக்ஷியில் தலையிட முடியாது. ஆனால் அவரும் ராஜேந்திர பாபுவும் பீகாரில் காங்கிரஸ் தலைவர் என்ற நிலைமையிலேயே வேலை செய்தார்கள்.

நண்பர்:— அரசியல் சதுரங்கத்தில் வங்காளத்தை ஒரு காயாக வைத்து ஆடுகிறார்கள் அல்லவா ?

காந்தியடிகள்:—

அப்படியில்லை. வங்காளம் வங்காளமாய் இருப்பதால்தான் வங்காளம் இப்பொழுது முன்னணியில் இருந்து வருகிறது. தாகூரையும் பங்கிம் சந்திரரையும் பெற்றெடுத்த மாகாணம் வங்காளம்தான்.

சிட்டகாங் ஆயுதசாலையைக் கைப்பற்றுவதற்காகச் செய்த முயற்சி தவறு என்பது என்னுடைய அபிப்பிராயம். ஆயினும் அந்த வீரர்கள் பிறந்ததும் இங்கேதான். வங்காள மட்டும் காரியத்தைச் சரியானபடி நடத்திக் காட்டுமானால் இந்தியாவின் பிரச்சனைகளெல்லாம் தீர்ந்துவிடும். அதனால் தான் நான் என்னை ஒரு வங்காளி ஆக்கிக் கொண்டிருக்கிறேன். அத்தகைய மகா புருஷர்கள் பிறந்த நாட்டில் ஏன் கோழைத்தனம் காணப்பட வேண்டும்?

*நண்பர்:—*

கோவில்கள் நாசமாக்கப்பட்டிருப்பதை பார்க்கும் பொழுது ஜனங்கள் எதிர்த்து உயிரைக் கொடுத்திருக்க வேண்டாமா என்று தோன்றுகிறது.

*காந்தியடிகள்:—*

ஆம் அப்படிச் செய்திருந்தால் அயலார் உதவி உங்களுக்குத் தேவையில்லை. இன்று நோவாகாளியில் தலைவர்களாக உள்ளவர்கள் யாரையும் காணோம். அவர்கள் அபாயத்துக் கஞ்சி வீடு வாசல்களை விட்டு ஓடிவிட்டார்கள். மனோரஞ்சன் பாபு யாரைச் சமாதான கமிட்டியில் நியமிப்பது என்று திகைத்துக் கொண்டிருக்கிறார். தலைவர்கள் இல்லாவிட்டால் என்ன? சாதாரண மக்களை நியமிக்கலாமென்று சொன்னேன். இது சாதாரண மக்களுடைய காலமாகும்.

*நண்பர் :—*

மகாத்மாஜீ! உண்மையிலேயே சமாதான கமிட்டிதானா? அல்லது யுத்த கமிட்டியா? அதைச் சொல்லுங்கள்.

*காந்தியடிகள்:—*

சமாதான கமிட்டிதான். ஆனால் சமாதானம் நடைபெறுவிட்டால் யுத்தம்தான் உண்டாகும். நாம் எப்பொழுதும் சமாதானத்தை உண்டாக்கவே முயல வேண்டும். ஆனால் சமாதானமென்று சொல்லி மானத்தையும் உயிரையும் பொருளையும் பறிகொடுத்து விடமுடியாது. இந்த இரண்டு நிபந்தனைகளின் பேரிலேயே ஜனங்கள் திரும்பி வருவார்கள். ஆனால் மனோதைரியமிருந்தால் எந்த பாதுகாப்பையும் எதிர் பாராமல் வந்துவிடுவார்கள். ஒரு ஹிந்துவும் ஒரு முஸ்லிமும் ஒவ்வொரு கிராமத்திலும் பொறுப்பேற்க முன் வர வேண்டுமென்று நான் யோசனை கூறினேன். ஜனங்கள் மனோதைரியமுடையவர்களாயிருந்தால் அக்கிரமிகள் தாமாகவே திருந்திவிடுவார்கள். ஏதோ விஷயமறியாமல் சொல்கிறேன் என்று எண்ண வேண்டாம். நான் கத்தியவாரைச் சேர்ந்தவன். கொள்ளைக்காரர்களுக்குப் பேர்போன பிரதேசம். அவர்களைத் திருத்த முடியாது என்று நான எண்ண மாட்டேன். அதுவும் தவிர இங்கு நடந்தவை எல்லாம் போக்கிரிகளினாலேயே நடந்ததாக நம்பமாட்டேன்.

*நண்பர்:—* ஹிந்துக்கள் அக்கிரமங்கள் செய்யவில்லை. முஸ்லிம்கள் தானே அக்கிரமங்கள் செய்தார்கள்? அதனால் முஸ்லிம்களை மட்டுமே சமாதான கமிட்டிகளில் நியமித்தால் போதாதா?

*காந்தியடிகள் :—*

போதாது. ஹிந்துக்களும் இருக்கவேண்டும். இல்லையானால் சமாதான கமிட்டிகள் வெறும் நாடகமாகவே ஆகிவிடும்.

*நண்பர் :—*

பீஹாரை அஹிம்சையைக் கொண்டு அடக்கிவிட முடிந்ததல்லா?

*காந்தியடிகள் :—*

ஆம். ஆனால் 1942-ம் வருஷத்துக்கு முன்பும் பின்பும் பீஹார் கட்டுத் திட்டத்துக்கு அடங்கிய பலாத்காரத்தை உபயோகிக்க கற்றுக்கொண்டிருக்கிறது. நாம் 1942-ம் வருஷத்தில் அக்கிரமிகளுக்கு அதிகமாக இடம் கொடுத்தோம். 1942-ம் வருஷத்து எழுச்சியின் மதிப்பை அறிவேன். ஜனங்கள் கோழைகளாக அடங்கி நடக்கவில்லை. ஆயினும் அப்பொழுது தவறுகளே நடைபெற்றன என்பதை மறக்க முடியாது. அப்பொழுது நடந்ததைவிட நல்ல விதமாய் நடக்க நாம் கற்றுக்கொள்ள வேண்டும்.

*பியாரேலால்.*

## அமெரிக்கப் பாடசாலைகள்

அமெரிக்காவில் பல ஜாதியாரும், பல மதத்தாரும் வசிக்கிறார்கள். அதனால் அங்கும் அவர்களும் நம்மைப் போல் சமூகப் பிரச்சனையை தீர்க்கவேண்டியவர்களாயிருக்கிறார்கள். இதற்காக 20-வருஷ காலமாக டாக்டர் ராக்கேல் பாய் என்னும் அமெரிக்கக் கல்வி நிபுணர் அரும் பாடு பட்டு வருகிறார். அவர் 1943-ம் வருஷத்தில் "அமெரிக்கர்களே ஒன்று சேருங்கள்" என்ற பேருடைய ஒரு புஸ்தகத்தை வெளியிட்டார். சென்ற வருஷம் "அமெரிக்கர்களே ஒன்று சேர்ந்து தேச நிர்மாணம் செய்யுங்கள்" என்ற நூலை வெளியிட்டார்.

அந்த அம்மையாருடைய மேல்பார்வையில் எங்கிள் உட் என்னும் இடத்திலுள்ள பாடசாலை மாணவர்கள் தங்கள் ஆண்டு விழாவை கீழ்க்கண்டவாறு நடத்தினார்கள்.

ஆரம்பத்தில் இரண்டு கிறிஸ்தவப் பாதிரிகளும் ஒரு யூதவகுப்பைச்சேர்ந்த புரோகிதரும் சேர்ந்து உண்டாக்கிய பிரார்த்தனைப்படி பிரார்த்தனை நடத்தினார்கள்.

அதன் பின் அவர்கள் "அழகான அமெரிக்கா" என்னும் கீதத்தைப் பாடி அமெரிக்கக் கொடிக்கு வணக்கம் செலுத்தினார்கள்.

அதன் பின் கீழ் கண்ட: பிரஜாக் கொள்கையை எல்லோரும் சேர்ந்து சொன்னார்கள்.

"நாமெல்லோரும் கடவுள் மக்கள். அதனால் நாம் சகோதர சகோதரிகள். நம்முடைய கொடி தியாகத்தின் அறிகுறி. சகல மக்களின் க்ஷேமத்தின் சின்னம். நம்முடைய தேசம் நம்மைத் தனக்காக உயிர் துறக்கும்படி சொல்லவில்லை. சிறந்த மக்கள் உண்டாக்ககூடிய விதத்தில் வாழ வேண்டும் என்றே கூறுகிறது."

அதன்பின் இரண்டு மாணவர்கள் "அமெரிக்கப் பிரஜைக்கு வேண்டிய லக்ஷணங்கள் எவை" என்பதைப் பற்றி ஒரு சம்பாஷணை நடத்தினார்கள்.

அதன் பின் மத சுதந்திரமும், சமத்துவ சந்தர்ப்பங்களுமே அமெரிக்கர்களுடைய லட்சியங்கள் என்பதைக் குறித்து ஒரு பிரசங்கம் நடைப்பெற்றது.

இறுதியில் டெனிஸ் மக்கார்தி என்பவர் "துவேஷம் இறக்கவேண்டிய தேசம் இது" என்று எழுந்து சொன்னார். உடனே சபையிலுள்ளவர் எலலோரும் கீழ்க்கண்டவாறு கூறினார்கள்:—

"என்னுடைய மதம் எனக்கு அருமையானது. ஆயினும் எல்லா மதங்களுக்கும் மரியாதை செய்யும்பொழுதுதான் நான் என் தேசத்திற்கு சிறந்த சேவை செய்கிறேன்."

இத்துடன் ஆண்டு விழா இனிது முடிந்தது.

**வி. ஜி. டி.**

**அச்சடித்தவர் பி. அருணாசலம், கமர்ஷியல் பிரிண்டிங் அன் பப்ளிஷிங் ஹவுஸ், 46, அரண்மனைக்காரத் தெரு, ஜி. டி., சென்னை. பிரசுரித்தவர் : சின்ன அண்ணாமலை, தமிழ்ப்பண்ணை, 6/2 நாகேஸ்வரராவ் ரோடு தியாகராயநகர், சென்னை 17. ஆசிரியர்கள் : பொ. திருகூட சுந்தரம் ; நாமக்கல் கவிஞர் வெ. இராமலிங்கம் பிள்ளை**